1974 மார்ச் 19]

திரு. என். கே. பழனிசாமி: தலைவரவர்களே, லா காலேஜில் படிப்பவர்கள் வேறு வேலையில் இருந்து கொண்டு கூடப் படிக்கலாம். இன்ஜினீரிங் காலேஜில் படிப்பதற்கு வேறு வேலையிலிருந்து கொண்டு படிப்பதற்கு அனுமதிப்பதில் என்ன சங்கடம் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுமாதிரி "சான்ட்விச் கோர்ஸ்" என்ற வகையில் ஒரு கமிட்டி அமைக்கப்படவில்லை. ஆனால் ஒரு கமிட்டி "போர்டு ஆப் ஸ்டடீஸ்" இன் இன்ஜினீரிங் ஆப் தி மதுரை யூனிவர்சிடி என்று அமைக்கப்பட்டு, டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் மட்டும் தியாகராஜா கல்லூரியில் ஏற்படுத்தலாமா என்று செயற் குறிப்பு அனுப்பியிருக்கிறார்கள்.

அந்தக் கருத்துரை மாநில நூற்பு ஆராய்ச்சிக் கழகத்தால் ஆராயப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. அந்த முறை வருமானால் டெக்ஸ்டைல் டெக்னாலஜியில் பரிட்சார்த்தமாக ஏற்படுத்த வேண்டும். அதற்கே கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிலே $37\frac{1}{2}$ சதவீதம் மத்திய அரசும், $37\frac{1}{2}$ சதவீதம் மாநில அரசும் மீதமுள்ள 25 சதவீதம் அந்த ஸ்தாபனமும் ஏற்க வேண்டுமென்ற அடிப்படையில் அது அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

கோவை விளையாட்டு அரங்கம்.

*496 வினா— திரு சு. துரைசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவையில் கட்டப்பட்டு வருகின்ற விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் எப்போது முடிவுபெறும்?

(இ) அதன் செலவு எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) கோவையில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கத்தின் வேலைகள் 1974 ஏப்ரலுக்குள் முடிவடையும்.

(இ) அரங்கத்திற்கான மொத்த மதிப்பீட்டுச் செலவுத்தொகை ரூ. 25 லட்சம். (ரூபாய் இருபத்தைந்து லட்சம் மட்டும்).

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, மொத்தம் செலவழிக்கப்படுகிற அந்த 25 லட்சம் ரூபாயில் அரசாங்கம் கொடுத்த மானியம் எவ்வளவு? அதைத் தவிர நகர மன்றத்திலிருந்து கொடுக்கப்பட்ட பணம் எவ்வளவு? தனியாரிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணம் எவ்வளவு? இந்த விளையாட்டு மைதானம் கட்டி முடிக்கப்பட்டால்,

கோவையில் நடக்கும் எல்லா விளையாட்டுப் போட்டிகளையும் அங்கேயே நடத்த வேண்டுமென்று அரசு கேட்டுக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இந்த விளையாட்டு அரங்கம் கோவை மாவட்ட விளையாட்டுக் குழுவின் தலைவரின் கீழே இருக்கும். எல்லோரும் பயன்படுத்திக்கொள்கிற அளவுக்கு இந்த விளையாட்டு அரங்கம் அமையக்கூடும். அதற்கு உதவித் தொகையாக மாநில அரசாங்கத்திலிருந்து பங்கு ரூ 1 லட்சம். கோவை மாநகராட்சியின் பங்கு ரூ. 5 லட்சம் மற்ற துறைகளில் இருந்து வந்த விவரங்கள் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரப்படும்.

பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பு.

*497 வினா— திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்காக திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) & (இ) : மீன் பிடிப்பை மேற்கொள்வதற்கு பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்காக மீனளத் துறை இயக்குநர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, பழவேற்காடு ஏரியில் மீன் வளர்ப்பதற்குரிய திட்டத்தின் அடிப்படை நோக்கமென்ன ? அந்த ஏரியில் தண்ணீர் வற்றி விடுவதாக சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் இந்தத் திட்டம் கைவிடப்படுமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இந்தப் பகுதி கயவாய் பகுதி (Estuary). இந்தப் பகுதியில்தான் நிறைய எரால் குஞ்சுகளை வளர்க்கலாம் என்று ஆராய்ச்சி மூலமாக அறிந்தோம். இந்த இடத்தில் எரால் மீன் மட்டுமல்லாமல், மடவை மீன் இனங்களையும் வளர்க்கலாம் என்று அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, இந்த பழவேற்காடு ஏரி வட செங்கற்பட்டு மாவட்டத்தின் பெருவாரியான பகுதிகளுக்குப் பயன் தரும் வகையில் கடலோர கழிமுகப் பகுதிகளில் விரிந்து கிடக்கிறது. இது பல குப்பங்களில் வசிக்கும் மீனவர் வாழ்க்கைக்கு ஆதாரமுள்ள பகுதியாகும். ஆந்திர எல்லை வரையில் இது விரிந்து கிடக்கிறது. சமீபத்திலே பெரிய சிக்கல் ஏற்பட்டு மீன்கள் போதிய அளவுக்குக் கிடைக்காமல் அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஏரியைச் சீரமைத்து, அவர்கள் வாழ்க்கைக்கு ஆதாரத்தைத் தரும் ஒரு நல்ல திட்டத்தை இயக்குநர் அவர்கள் அனுப்பியிருக்கிறார்கள். இயக்குநர் அவர்கள் அனுப்பியுள்ள பரிந்துரையை ஏற்று, அரசாங்கம் பரிசீலனை செய்து அதை நிறைவேற்ற முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.